## இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் - 2013

இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரசாங்க கமத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) பின்தொடர்ந்து இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில்

கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற்கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) இ.க.நி. இல. 02

இருப்பினை மதிப்பிடுகையில் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியை பயன்படுத்த வேண்டிய போதிலும், மரமுந்திரிகை பருப்பு விற்பனை நிலையங்களில் முழுமையாக முடிவடைந்த மரமுந்திரிகை பருப்பு இருப்பின் கிரயமும் தேறிய தேறக்கூடிய பெறுமதியும் கணிப்பிடப்படாது விற்பனை விலையில் 15 சதவீத இலாப எல்லையுடன் இருப்பு பெறுமதியிடப்பட்டிருந்தது. அவ்வாறே பொதியிடல் நிலையங்களில் முடிவடைந்த இருப்புக்களின் பெறுமதி மேற்படி கிரயத்தில் 90 சதவீதமாகவும் பகுதியளவில் முடிவுற்ற இருப்பில் 95 சதவீதமாகவும் கருதப்பட்டு இருப்புக்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இ.க.நி. இல. 16

(i) மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பில் மீள்மதிப்பீடு நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் சுதந்திரமான மீள்மதிப்பீட்டாளர் ஒருவர் பயன்படுத்திக் கொள்ளப்பட்டாரா போன்றன வெளிக்காட்டப் பட்டிருக்கவில்லை.

(ii) காணி கட்டிடம் தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக்களில் 41 சதவீதத்தை பிரதிநித்துவம் செய்கின்ற ரூபா 37,451,944 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டதும், கூட்டுத்தாபனத்தினால் தொடர்ந்தும் பயன்படுத்தி வரப்பட்டிருந்ததுமான. அச்சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இ.க.நி. இல. 19

(i) பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் காப்பீட்டு மதிப்பீட்டாளர் ஒருவரைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டு காப்பீட்டு இலாப நட்டங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பணிக்கொடை நிதியத்தினை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இ.க.நி. இல. 39, 32 மற்றும் இ.நி.அ.நி. 07

வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறப்பட வேண்டியவைகள், வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் முற்செலுத்துகைகள், காசும் காசுக்கு சமமானவைகளும், வியாபாரக் கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் என்பவற்றை நிதிச் சொத்துக்களாகவும் நிதிப் பொறுப்புக்களாகவும் இனங்காண்பதற்கான அளவுகோல்கள், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்தல் ஆகியன நியமங்களின் பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை.

(உ) இ.க.நி. இல. 41

மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திடமுள்ள உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் அவதாவது மரமுந்திரிகை மரங்களை இந் நியமத்தின் பிரகாரம் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்தல் மற்றும் வெளிக்காட்டல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டினுள் விற்பனைப் பெறுமதி ரூபா 204,679 ஆன மரமுந்திரிகைப் பருப்பு, வழங்கல் கட்டளைகள் வழங்கப்படாது இருப்புப் புத்தகத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. இந்த வழங்கல் கட்டளையை முறையான நடைமுறையொன்றைப் பயன்படுத்தி வழங்குவதற்கும் கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 இற்கு முன்பிருந்து நிலுவையாகவிருந்த ரூபா 2,003,354 ஆன வெளிவாரி கடன்பட்டோர் மீதி 2013 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,962,800 தொகை 2009 ஆம் ஆண்டில் தேசத்தைக் கட்டியெழுப்புதல் அமைச்சிற்கு மரக்கன்றுகளை வழங்குதல் தொடர்பில் எழுந்த கடன் மீதியாகக் காணப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அக்கடன் மீதியை அறவிடுவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காமையால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அக்கடன் மீதியை அறவிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

(ஆ) பல வருடங்களாக நிலவிவருகின்ற பின்வரும் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| நிறுவனம் | பெறுமதி | காலம் |
|---|---|---|
| | ரூபா | |
| நெற் சந்தைப்படுத்தும் சபை | 3,500,000 | 2005 ஆம் ஆண்டு முதல் |
| செலுத்த வேண்டிய உதவுதொகைகள் | 2,429,612 | 2010 ஆம் ஆண்டு முதல் |
| பயிர்க் காப்புறுதி | 719,466 | 2005 ஆம் ஆண்டு முதல் |
| மொத்தம் | 6,649,078 | |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (I) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | கூட்டுத்தாபனம் வருமான வரி செலுத்துவதற்கு கடப்பாடுடைய நிறுவனமான போதிலும், 2011/2012 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கும் 2012/2013 வரிமதிப்பீட்டு ஆண்டிற்கும் வரி அறிக்கைகளை தயாரிப்பதற்கோ அல்லது வருமான வரியினைச் செலுத்துவதற்கோ |

| | |
|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (II) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டம் | மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை விநியோகிக்கின்ற பொருட்களின் உற்பத்தியாளர், மற்றும் அதன் வருடாந்த புரள்வு ரூபா 12 மில்லியனுக்கு மேற்படுகையிலும் பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்து கொண்டு பெறுமதிசேர் வரியினை செலுத்த வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தால் வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. |
| (III) 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச்சட்டம் | உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அத்துடன் காலாண்டுக்கான புரள்வு ரூபா 650,000 இனை விஞ்சிய நிறுவனங்கள் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியினைச் செலுத்துவதற்கு கடப்பாடுடைய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியினை செலுத்துவதற்காக பதிவுசெய்வதற்கும் வரியினை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (IV) 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதாரச் சேவைகள் கட்டண அதிகாரச்சட்டம் | காலாண்டுக்கான புரள்வு ரூபா 7.5 மில்லியனை விஞ்சும் நிறுவனங்கள் பொருளாதாரச் சேவைகள் கட்டணத்தை செலுத்த வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனம் பொருளாதாரச் சேவைகள் கட்டணத்தைச் செலுத்துவதற்காக பதிவுசெய்வதற்கும் வரியினை செலுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (V) 1954 இன் 19 ஆம் இலக்க கடை காரியாலய ஊழியர்கள் (சேவைகள் மற்றும் சம்பளத்தினை முறைப் படுத்தல்) அதிகாரச்சட்டம் | ஊழியர்களுக்கு மேலதிகநேரப் படியினை செலுத்துகையில் மேலதிகநேர வீதம் கடை காரியாலய ஊழியர்கள் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், வேலை செய்யப்பட்ட மேலதிநேரத்தினை கணிப்பிடுகையில் கடை காரியாலய ஊழியர்கள் அதிகாரச்சட்டத்தினைக் கருத்திற் கொண்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தானத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 966,893 மிகையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான மிகை ரூபா 44,233,831 ஆனதால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 43,266,938 குறைவொன்று அவதானிக்கப்பட்டது. மரமுந்திரிகைக் கன்றுகள் விற்பனை வருமானம் ரூபா 47,408,875 ஆல் வீழ்ச்சியடைந்திருந்தமை மற்றும் சேவைகள் பிரிவின் செலவினம் ரூபா 16,888,461 ஆல் அதிகரித்திருந்தமையே இதற்குப் பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தானத்தின் நிதி விளைவுகள் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் காணப்பட்ட நிலமையுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

#### (அ) வர்த்தகப் பிரிவு

| | தோட்டங்கள் மற்றும் விற்பனைப் பிரிவு | | | வர்த்தக நாற்றுமேடைகள் பிரிவு | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | வேறுபாட்டின் சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) | 2013 | 2012 | வேறுபாட்டின் சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) |
| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா | |
| மொத்த வருமானம் | 85,411,920 | 57,375,124 | 49 | 54,307,276 | 101,947,112 | (47) |
| மொத்தச் செலவினம் | 91,462,288 | 61,367,823 | 49 | 20,728,222 | 36,115,643 | (43) |
| செயற்பாட்டு இலாபம்/நட்டம் | (6,050,368) | (3,992,699) | 51.5 | 33,579,054 | 65,831,469 | (49) |
| இலாப எல்லை சதவீதம் | (7) | (6.5) | | 162 | 182 | |

**(ஆ) சேவைகள் பிரிவு**

| | 2013 ரூபா | 2012 ரூபா | வேறுபாட்டின் சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| அரசாங்க மானியம்- மூலதனம் | 25,044,560 | 16,890,069 | 48 |
| மீண்டெழும் | 52,500,000 | 58,580,000 | (10) |
| வரித்தகப் பிரிவின் இலாபம் | 27,528,686 | 61,838,770 | (55) |
| வட்டி வருமானம் | 6,668,908 | - | - |
| சொத்து அகற்றல் இலாபம் | 2,531,823 | - | - |
| ஏனைய வருமானங்கள் | 78,538 | 1,362,562 | (94) |
| மொத்த வருமானம் | 114,352,515 | 138,671,401 | (17.5) |
| சேவைகள் பிரிவின் மொத்தச் செலவினம் | 113,385,622 | 94,437,570 | 20 |
| இலாபம் | 966,893 | 44,233,831 | |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தோட்ட மற்றும் விற்பனை பிரிவின் செயற்பாட்டு இலாபம் 2012 உடன் ஒப்பிடுகையில் 51.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் விதை மரமுந்திரிகை கன்றொன்றினதும் ஒட்டப்பட்ட மரமுந்திரிகை கன்றொன்றினதும் கிரயம் முறையே ரூபா 27.50 மற்றும் ரூபா 39 ஆகக் காணப்பட்டதுடன் விற்பனை விலைகள் முறையே ரூபா 100 மற்றும் ரூபா 200 ஆகக் காணப்பட்டமையால் வர்த்தக நாற்றுமேடைப் பகுதி 162 சதவீத உயர்ந்த இலாப எல்லையினை அடைந்திருந்தது.

(இ) திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்திற்கு மரமுந்திரிகைக் கன்றுகளை விநியோகித்தமையால் 2011 ஆம் ஆண்டு முதல் மரமுந்திரிகைக் கன்றுகளை விநியோக வருமானம் துரிதமாக அதிகரித்திருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் மரமுந்திரிகைக் கன்று வருமானம் 47 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஈ) பொதியிடல் நிலையங்களின் உற்பத்திக் கிரயம் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 219 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டில் மரமுந்திரிகைப் பருப்பு உற்பத்தி அதிகரித்திருந்தமை மற்றும் ரூபா 12,891,411 பெறுமதியான ஏறத்தாழ 7000 கிலோ கிராம் மரமுந்திரிகைப்

பருப்பு வெளித்தரப்பினர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமை போன்றன இதற்குத் தாக்கமளித்திருந்தது.

### 3.2.1 நிதிக் கட்டமைப்பு

நிதிக்கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கட்டமைப்பு 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட நிலைமையுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| மூலங்கள் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமை | | | |
|---|---|---|---|---|
| | 2013 | சதவீதம் | 2012 | சதவீதம் |
| | ரூபா | | ரூபா | |
| மூலதனம் | 40,000,000 | 15 | 40,000,000 | 17 |
| அரசாங்க மானியம் - மூலதனம் | 58,744,656 | 23 | 34,959,185 | 15 |
| ஏனைய நிறுவன மானியம் | 19,691,010 | 08 | 17,910,572 | 08 |
| மூலதன ஒதுகக்கம் | 22,241,383 | 09 | 23,676,376 | 10 |
| நீண்டகாலப் பொறுப்புகள் | 37,131,463 | 14 | 37,784,779 | 16 |
| முன்கொண்டுவரப்பட்ட இலாப /நட்டம் | 81,339,297 | 31 | 77,787,907 | 34 |
| | 259,147,809 | 100 | 232,118,819 | 100 |
| பயன்பாடு | | | | |
| நிலையான சொத்துக்கள் | 64,131,331 | 25 | 64,986,142 | 28 |
| பயிரிடல் காணிகளுக்கான செலவினம் | 60,373,028 | 23 | 52,309,024 | 22 |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 134,643,450 | 52 | 114,823,653 | 50 |
| | 259,147,809 | 100 | 232,118,819 | 100 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான அரசாங்க மூலதன மானியம் எட்டு சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

(அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மரமுந்திரிகைத் தோட்டங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்திக் கிரயங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோட்டம் | உற்பத்தி மரமுந்திரிகை காய்களின் உற்பத்தி | உற்பத்திக் கிரயம் | கிலோ ஒன்றின் கிரயம் | முதிர்ச்சி மிக்க மரமுந்திரிகை பிரதேசம் | முதிர்ச்சியற்ற மரமுந்திரிகை பிரதேசம் | வயதெல்லை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | முதிர்ச்சியடைந்தவை | முதிர்ச்சியடையாதவை |
| | (கி.கி) | ரூபா | ரூபா | ஹெக்டயார் | ஹெக்டயார் | ஆண்டுகள் | ஆண்டுகள் |
| புத்தளம் | 15,882 | 9,437,857 | 594 | 191.04 | 110.3 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைந்த |
| கமந்தழுவ | 28,542 | 7,728,507 | 271 | 129 | 37 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைந்த |
| எழுவன்குளம் | 18,730 | 5,371,016 | 287 | 72.5 | 10.5 | 11 இற்கு மேல் | 5 இற்கு குறைந்த |
| ஹாடி | 4,238 | 1,495,051 | 353 | 70.85 | 10.12 | 30 இற்கு மேல் | 5 இற்கு குறைந்த |
| நாலந்தா | 2,782 | 1,082,281 | 389 | 20.24 | 8.1 | 10 இற்கு மேல் | 5 இற்கு குறைந்த |
| விலச்சிய | 483 | 185,210 | 383 | - | 7.29 | - | 5 இற்கு குறைந்த |
| மஹாஓய | 196.7 | - | | - | 10.12 | - | 5 இற்கு குறைந்த |
| மிரிஜ்ஜவில | 112.6 | - | | - | 40.49 | - | 5 இற்கு குறைந்த |
| மொத்தம் | 70,966.3 | | | 483.63 | 233.92 | | |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கூட்டுத்தாபனத்திற்குச் செந்தமான விளைச்சல் மிக்க 484 ஹெக்டயார் காணியில் 81 சதவீதமான அல்லது 391 ஹெக்டயர்கள் 30 ஆண்டுகளிற்கும் மேலான உற்பத்தித் திறனுடைய ஆயட்காலத்தைக் கடந்திருந்தது.

(ii) 1 கி.கி. மரமுந்திரிகை பருப்பின் சந்தைப் பெறுமதி ஏறத்தாழ ரூபா 225 ஆகக் காணப்பட்டதுடன் புத்தளம், கமந்தழுவ, எழுவான்குளம், ஹாடி, மஹவிலச்சிய தோட்டங்களில் 1 கி.கி. இற்கானன உற்பத்திக் கிரயம் சந்தைப் பெறுமதியை மிகைத்திருந்தது.

**(ஆ) உதவுதொகை நிகழ்ச்சித்திட்டம்**

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கல் தொடர்பில் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| ஆண்டு | மாவட்டம் | பயிரிடுவோர் எண்ணிக்கை | ஏக்கர் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை | 2013 இல் அவதானிக்கப்பட்ட பலனளித்திருந்த மரமுந்திரிகைக் கன்றுகளின் எண்ணிக்கை | செயன்முன்னேற்றம் (வழங்கப்பட்ட கன்றுகளின் சதவீதமாக) |
|---|---|---|---|---|---|---|
| 2010 | புத்தளம் | 372 | 564 | 45,120 | 8,914 | 22.8 |
| | குருணாகல் | 508 | 600 | 48,000 | 12,352 | |
| 2011 | புத்தளம் | 314 | 600 | 48,000 | 11,905 | 28.7 |
| | குருநாகல் | 383 | 500 | 40,000 | 13,362 | |

உதவுதொகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிர்ச் செய்கையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த மரமுந்திரிகைக் கன்றுகளில் பலனளித்திருந்த கன்றுகளின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 22.8 சதவீதமாகவும் 2011 ஆம் ஆண்டில் 28.7 சதவீதமாகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டில் பின்வரும் தோட்டங்களில் மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் நேர் மற்றும் நிர்வாகச் செலவினம் அதிகரித்திருந்தமை காரணமாக அத் தோட்டங்கள் செயற்பாட்டு நட்டங்களை அடைந்திருந்தன.

| பிரிவு | வருமானம் | உற்பத்திச் செலவினம் | செயற்பாட்டு நட்டம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| புத்தளம் தோட்டம் | 4,259,421 | 9,459,727 | 5,200,306 |
| கமந்தழுவ தோட்டம் | 7,845,919 | 8,233,640 | 387,721 |
| எழுவான்குளம் தோட்டம் | 4,680,723 | 5,422,046 | 741,323 |
| நாலந்தா தோட்டம் | 859,106 | 1,286,266 | 427,160 |
| ஹாடி தோட்டம் | 1,534,199 | 1,875,950 | 341,751 |
| மொத்தம் | | | 7,098,261 |

(ஆ) கூட்டுத்தாபனத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த வைன் உற்பத்திச் செயற்திட்டத்தின் வருமானம் ரூபா 234,150 ஆக காணப்பட்டதுடன் செலவினம் ரூபா 288,958 ஆக காணப்பட்டமையால் செயற்பாட்டு நட்டம் ரூபா 54,808 ஆகும்.

## 4.3 பதவியணி நிர்வாகம்

கூட்டுத்தாபனத்தின் உயர் மட்டப் பதவிகளில் ஒரு வெற்றிடம் காணப்பட்டதுடன் நிறைவேற்று மற்றும் நிறைவேற்றுத் தரமற்ற தரங்களில் 24 வெற்றிடங்களும் சிற்றூழியர் தரத்தில் 12 வெற்றிடங்களுமாக அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பில் 37 வெற்றிடங்கள் காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2014 மார்ச் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 தீர்வுகாணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2012 யூலை 24 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட கூட்டுத்தாபனத்திற்கு உரித்தற்ற மரமுந்திரிகைக் காணிகளின் சட்டரீதியான உரித்தினை கூட்டுத்தாதபனத்திற்குக் கையேற்றல் என்ற பிரச்சினைக்கு 2014 மார்ச் 31 ஆந் திகதி வரை தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபன தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) மீளப்பெறப்படும் மரமுந்திரிகையை ஏற்றுக்கொள்ளல்

(ஆ) மரமுந்திரிகை இருப்பினை களஞ்சியப்படுத்தல்

(இ) இலவச மரமுந்திரிகை விநியோகம்

(ஈ) மரமுந்திரிகைக்கான உலர் நிறைக்கு இடமளித்தல் மற்றும் நியமக் கழிவு